RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

DOI: 10.34256/ijmrd2126

# Sangam Landscape and its Theological Soctrines

# ஐந்திணை நிலங்களும் அதன்வழி இறைநெறிக் கோட்பாடுகளும்

**S. Thenmozhi** [a,*]

[a] Department of Tamil, Queen Mary's College (Autonomous) Chennai- 600004, Tamil Nadu, India.
*Corresponding author Email: karthithen79@gmail.com
DOI: https://doi.org/10.34256/ijmrd2126
Received: 18-05-2021; Accepted: 26-06-2021; Published: 27-06-2021

**Abstract:** This article is about the primary deities worshiped by the Pentateuch and the system of worship of those deities, as well as the reasons for which these rituals are included. Furthermore, this article does not show all the gods worshiped by the Pentateuch, but only in a small form the five mentioned by Tolkappiahar as the Lord of the Pentateuch. So this article is set in the context of the meaning of theology, the need for theology, and the worship of the five gods. Theology in general was initially the rites of man who feared nature. Innumerable gods have appeared in every department over the course of the day. However, this article only deals with the deities, including Murugan, Thirumal, Indra, Varuna and Koravai, who are considered to be the foremost.

**Keywords:** Worship, Sangam landscape, Lord, Murugan, Thirumal

**Language:** **Tamil**

## முன்னுரை

இறை வழிபாடு என்பது மனத்தினைத் தொடர்புடைய ஒன்று. தனி மனிதனைச் சமுதாய வாழ்வுடையவானக்கி அவனை அன்பு, அருள், ஒழுக்கம் உடையவனாக மாற்றுவது வழிபாடு என்ற நம்பிக்கை இன்றளவும் இருந்து வருகிறது. இறைநெறி என்பது மனிதனை மனிதனாக கருதச்செய்ய வேண்டிய அறத்தினைக் கற்பிக்கும் உணர்வாகும். அதாவது நல்வாழ்விற்குத் தேவையான ஒழுக்கமுறைகளை எடுத்துரைப்பதாகவும் நல்ல செயல் எவை தீய செயல் எவை என எடுத்துரைத்து மனித மனத்தினை நல்வழிப்படுத்துவதற்குத் இறை உணர்வு ஒவ்வொருவருக்கும் தேவைப்படுகிறது. அத்தகைய இறைநெறி ஐந்திணை நிலத்தில் எவ்வாறு இருந்தன என்பதை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாக அமைகின்றது.

## ஐந்திணை நிலங்களின் இறைநெறித் தேவை

இன்றைய நிலையில் உண்மையான இறைநெறி என்பதனை அறிவிக்க வேண்டிய தேவை அதிகளவில் உள்ளது. ஏனெனில் நாட்டில் சாதி அடிப்படையிலும் மத அடிப்படையிலும் மனித உணர்வுகள் செத்துவருகிறது. அவற்றுள் இறைவனின் உன்னத தன்மையினை அறியாமல் இறைவனின் பெயரால்தான் நாட்டில் ஆங்காங்கு தீயவை நடந்துவருகின்றது. இத்தகைய நிலையினைப் போக்க உண்மையினாக இறைநெறி உணர்வை எடுத்துரைப்பதன் தேவை அதிகமாக இருக்கிறது.

### ஐந்திணை நிலமும் கடவுளும்

ஆதி காலத்து மனிதர்கள் பெரும்பாலும் இயற்கையின் சீற்றங்களுக்கும் அஞ்சியவனாக வாழ்ந்தான். எனவே இயற்கையிக்கு பயந்த நிலையில் சடங்குகளையும் சம்பரதாயங்களையும் ஏற்படுத்தி அதன்படி வாழத் தொடங்குகின்றான். நாளடைவில் விவசாய வறட்சியால் வருகின்ற பஞ்சம், பசி, பட்டினி போன்றவை இல்லாமல் இருப்பதற்கும் நாட்டில் நல்லது நடப்பதற்கும் நோய்ப்பிணிகள் இன்றி மக்கள் வாழ்வதற்கும் அன்றைய திணைக்குடி மக்களிடத்தில் எண்ணற்ற கடவுள்கள் தோன்றியது என்றே கூறலாம். அவற்றுள்,

"மாயோன் மேய காடுறை உலகமும்

.......................................................

வருணன் மேய பெருமணல் உலகமும்

என்ற மேற்கண்ட தொல்காப்பிய நூற்பாவால் முல்லை திணைக்கு மாயோன் என்ற திருமாலும், குறிஞ்சித் திணைக்கு சேயோன் என்ற முருகனும், மருதத்திணைக்கு வேந்தன் என்ற இந்திரனையும், நெய்தல் நிலத்திதற்கு வருணன் என்ற கடவுளும் அடையப்படுகின்றது. அதுபோன்றே தமிழ் நிலத்தில் வறட்சியினால் மட்டுமே உருவாகின்ற பாலை நிலத்தினை குறித்து தொல்காப்பிய கருப்பொருளும் கடவுளும் அடையாளப்படுகின்றது. அதாவது பாலை நிலத்திற்கென கொற்றவை என்ற தெய்வமும் இடம்பெறுவதாக அறியப்பட்டாலும் அவைகள் குறித்த பதிவுகள் சங்க இலக்கியங்களில் எத்தகையவாறு அமைந்துள்ளது என்பதை பின்வருமாறு காணலாம் (Parimanam, & Balasubramanian, 2007).

### குறிஞ்சி நிலத்தின் இறைநெறி

குறிஞ்சி நிலத்தின் முதன்மையான கடவுளாக வணங்கப்படுவது முருகனாகும். குறிஞ்சி மக்களாகிய குறத்தியினைக் காதல் திருமணம் செய்தவராக அறியப்படுபவர். அதனினும் தமிழ்ப் பண்பாட்டின் அடையாளத்துள் முதன்மையான காதலைப் போற்றிய கடவுளின் செயலாகவும் அறியப்படுபவர் இவர்தான். சங்க இலக்கிய அகம் சார்ந்த செயல்பாட்டுகள் காட்டும் பெரும்பாலான இடங்களில் வேலன் வெறியாட்டை காணமுடிகின்றது. அதனை,

**"வளநகர் சிலம்பப பாடிப் பலிகொடுத்து**
**உருவச் செந்தினை குருதியொடு தூஉய்"2**
**மறிக்குரல் அறுத்துத் தினைப் பரப்பு இரிஇச்"3**

என்னும் சங்கப் பாடலடிகள் வெறியாட்டினை கண்முன் காட்டுகிறது (Tolkappiyam, 1971). இத்தகைய வெறியாட்டு நிகழ்வு என்பது பெண் மனத்தினை அறிவதற்காக ஏற்படுத்தும் சடங்காக இருக்கிறது (Maraimalayadikal, 1965). அவ்வாறான சடங்கில் ஆடுகள் பலிஇடுவது கூட நிகழ்வதாக அறியப்படுகின்றது. அத்தகைய வெறியாடலை செய்யும் இடம் எத்தகையது என்பதும் சங்க இலக்கியத்தால் காட்சிப்படுத்தப்படுகின்றதை,

**"வேலன் தைஇய வெறி அயல்களனும்**

**.......................................**

**மன்றமும் பொதியிலும்"**

என்ற மேற்கண்ட திருமுருகாற்றுப்படை பாடலானது வெறியாடும் நிகழ்வினை நடக்கின்ற இடமான காடு, காவு, துருத்தி, மன்றம், பொதி, கடம்ப மரம் முதலியவை இங்கு காணப்படுகின்றது. மேலும் இவ்வரிகளில் வேலனின் தலையில் உயரான தலையணி இருந்தாகவும் பெரிய நீண்ட பாகை ஒன்றும் அவரது முதுகில் தொங்கியதாகவும் கூறப்படுவது வழிபாட்டு முறையை விளக்குவதாக உள்ளதை அறியமுடிகின்றது (Parimanam, & Balasubramanian, 2007). அதுபோன்றே வேலனின் வெற்றிச் செயல்கள் பலவும் சங்க இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. அவற்றுள்,

"நளி இரும்பரப்பின் மார்க்கடல் முன்னி

.................................................

கடுஞ்சின விறல்வேள்"

என்ற மேற்கண்ட பாடலானது முருகன் அசுரரை அழித்தமையும் கிரவுஞ்ச மலையைப் பிளந்தமையும் இதனுள் சொல்லப்படுகின்றது (Aravanan, 1984). மேலும் சேவல் கொடி வைத்துள்ளமையும் சூரனை வென்று தேவர்கள் சேனைத் தலைவனாகத் திகழ்ந்தமை போன்ற புராண இதிகாச நிகழ்வுகள் பதிற்றுப் பத்து பாடலால் அறியமுடிகின்றது.

## முல்லை நில மக்களும் இறைநெறி வழிபாடும்

சங்க இலக்கியத்தில் முல்லைநிலத்தின் இறைவனாகக் கருதப்படுபவர் திருமாலாகும். இவரை மால், மாயோன், நெடியோன் என்னும் பல பெயர்களில் இலக்கியம் சுட்டுகின்றது. இத்தகைய திருமாலின் பத்து அவதார தொம்ம செய்திகள் கூட சங்க இலக்கியத்தில் ஆங்காங்கு சொல்லப்பட்டுள்ளது. அவற்றுள் திருமாலின் கையில் உள்ள சக்கரம் பாண்டியன் நெடுஞ்செழியன் தலையாலங்கானத்துப் போரில் பெற்ற வெற்றிபெற்ற வேலினைவிட பன்மடங்காக மின்னியது என்பதை,

"கால் இயல் நெடுந்தேர்க் கைவண் செழியன்

.................................................

வேலினும் பல் ஊழ் மின்னி முரசு என"

என்ற இப்பாடலில் திருமாலின் சக்கரத்தின் செயல்கள் பற்றியும் கூறப்படுவதை அறியமுடிகிறது. முல்லை நில ஆயர்கள் ஆடு, மாடுகளைக் காப்பவனாகவும், தங்களின் முல்லை நிலத்தவன் என்றும் கருமை நிலமே நிலத்தின் அடையலாம். அதனை உடலால் கொண்டவர் என்றும் எண்ணியுமே திருமாலை நினைத்து வழிபட்டனர் என ஊகித்தறியமுடிகிறது (Shanmugampillai 1991). திருமால் உருவங்கள் தொடக்க காலத்தில் சுதை சிற்பங்களாகவும், கற்சிற்பங்களாவும் செய்தே வழிபட்டனர். மேலும் திருமாலின் கருவிகளான சங்கு, சக்கரம், வில், வாள், தண்டம் என்னும் ஐம்படை கருவிகளை ஒன்றாகச் சேர்த்து செய்த தாலி எண்ணும் அணியைச் சிறுகுழந்தைகளுக்கு அணிவித்தனர் என்பதை புறநானூறு 77:7 என்ற வரிகளால் அறியலாம்.

## மருத நில இறைநெறியும் வழிபாடும்

மருத நிலம் வயலும் வயல்சார்ந்த இடம் என்பதாகும். இங்கு இந்திரன் கடவுளாக அறியப்படுகிறார். "மருத நிலம் சார்ந்த ஆற்றங்கரை நாகரிகத்தை சேர்ந்த மக்கள் அனைவரும் அரசனின் தெய்வமாக விளங்கினும் அவ்வேந்தனை வணங்கினர். அதன்

காரணமாகவே தொல்காப்பியர் தீம்புனல் உலகின் தெய்வமாக வேந்தனைக் குறிப்பிட்டார் மயிலை சீனி வேங்கடசாமி கூறுகிறார். இத்தகை இந்திரன் ஆயிரம் கண்களை உடையவன். நூறு வேள்விகளைச் செய்து வெற்றிபெற்றவன் என்பதை,

"நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து நூறுபல

………………………………………….

தாழ் பெருந் தடக்கை உயர்த்த யானை"

என்ற மேற்கண்ட அடிகள் இந்திரனைப் பற்றிய இதிகாசச் செய்திகளை எடுத்துரைப்பதை அறியமுடிகின்றது. இந்திரனுக்குக் கோயில்கட்டி வழிபட்ட செய்தியை,

"ஒண்டொடி ∴ வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுள்"

என்ற மேற்கண்ட அடிகளால் இந்திரனுக்குக் கோயில் கட்டிய செய்தி அறியமுடிகின்றது.

## நெய்தல் நில இறைநெறியும் வழிபாடும்

நெய்தல் நிலம் என்பது கடவுளும் கடல் சார்ந்த பகுதியாகும். இங்குள்ள மக்கள் யாவரும் மீன்பிடிக்கும் பரதவர்களாகும். பரதவர்கள் கடலில் செல்கின்ற போது இயற்கையின் சீற்றங்களான மழை, புயல், காற்று போன்றவற்றால் யாவரும் பாதிக்கக்கூடாது என்னும் நோக்கில் வருணனை நோக்கி வணங்குவர். இதனைன, ஷவருணன் மேய பெருமணல் உலகமும'; என்ற வரிகளால் அறியமுடிகின்றது. மேலும் பரதவர்கள் கடலில் மீன்வளம் பெருகவேண்டி வருணனை நோக்கி வணங்கிப் பாடுவதை,

"சினை சுறாவின் கோடு நட்டு

………………………

புன்றலை யிடும் பரதவர்"

என்ற மேற்கண்ட வரிகளால் பரதவர்கள் கடல் வேட்டைக்குச் செல்லும் முன்பு கூடி ஆடி இறைவனுக்குரிய சடங்கினைச் செய்வர். அதன் பிறகே மீன்வேட்டைக்குச் செல்வர் என்பதையும், மீன்வளம் பெருகவேண்டியும் பரதவர்களைக் காக்கவேண்டும் என்றும் இப்பாடல் வரிகளால் அறியமுடிகின்றது.

## பாலை நில இறைநெறியும் வழிபாடும்

பாலை நிலம் மணலும் மணல் சார்ந்த இடமும் ஆகும். இங்கு கொற்றவை என்னும் கடவுளை பாலை நில மக்கள் வணங்கினர். இவ்வழிபாட்டின் காரணமாக இருப்பவை பாலை நிலத்தின் தன்மை மாறவேண்டும் என்பதாகும். இதனை,

"நாம்செல விழைந்தனம் ஆக ஓங்கு புகழ்க்
கான்அமர் செல்வி அருளலின் வெண்கால்"

என்ற மேற்கண்ட பாடலானது கொற்றவை வழிபாட்டினை தெளிவுபடுத்துவதை அறியமுடிகின்றது.

## முடிவுரை

இறைநெறி என்பது மனத்துடன் தொடர்புடையதாக இருக்கிறது. ஆனால் சங்க காலத் தமிழர்கள் மனத்துடன் தொடர்புடைய இறைநெறியினை பெருமளவில் தங்களும் தங்கள்

சார்ந்த சுற்றத்தார் பாதுகாப்பிற்கும், தங்களின் தொழில் சிறந்து விளங்கவுமே ஒவ்வொரு நிலத்திற்கும் ஏற்றாற்போல் சடங்குகளைச் செய்தனர் என்பதை இக்கட்டுரையின் வழியாக ஒரு சிறுபார்வையாய் ஆராய்ப்பட்டுள்ளது.

## References

(1971) Tolkappiyam - South India Saiva Siddhanta Works Publishing Society, Chennai, India.

Aravanan, K.P., (1984) Heritage Worship, Pari Publication, Chennai, India.

Maraimalayadikal, (1965) Tamil Religion, South India Saiva Siddhanta Works Publishing Society, Chennai

Parimanam, A.M., Balasubramanian, K.V., (2007) Speech by Akananooru, New Century Book House, Chennai, India.

Shanmugampillai, M., (1991) Worship and Rituals of Sankam Tamil, International Institute of Tamil Studies, Chennai, India.

## Funding

No funding was received for conducting this study.

## Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The author 2021. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

S. Thenmozhi, Sangam Landscape and its Theological Soctrines, Indian Journal of Multilingual Research and Development, Vol 2, Iss 2 (2021) 31-35. DOI: https://doi.org/10.34256/ijmrd2126